


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | நவம்பர் 01, 2018 | புரட்சி 17 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00


## உச்சநீதிமன்றத்தின் முக்கிய தீர்ப்பு

# பட்டாசு வெடிப்பது மத சுதந்திரம் அல்ல!

பட்டாசுகளுக்கு முழுமையான தடைஇல்லை என்றாலும் 'தீபாவளி' நாளில் இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரை இரண்டு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்கலாம். கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நாள்களில் இரவு 11.55 மணி முதல் 12.30 மணி வரை மட்டுமே பட்டாசு வெடிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் கட்டுப்பாடு விதித்துள்ளது. உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு வரவேற்கப்பட வேண்டியதாகும்.

6 மாதம் மற்றும் 14 மாத குழந்தைகள் சார்பில் அவர்களின் பெற்றோர்கள் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தனர். இந்தப் பட்டாசு வெடிப்பால் உருவாகும் மாசு - அதனால் தங்களுக்கு ஏற்படும் உடல் பாதிப்புகளால் உயிர் வாழ்க்கைக்கான அடிப்படை உரிமை பாதிக்கப்படுகிறது. எனவே பட்டாசுகளுக்கே தடை போட வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கை. இதை எதிர்த்து விருதுநகர் மாவட்ட பட்டாசு தீப்பெட்டி தொழிலாளர் சங்கம் வழக்கு தொடர்ந்தது. இந்த தொழிலாளர் சங்கம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற் சங்கமான 'சி.அய்.டி.யு.' சங்கம் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். "காற்று மாசுபடுவதற்கும் அதன் மூலம் நோய் பரவுவதற்கும் பட்டாசு தயாரிப்பாளர்கள் காரணம் அல்ல; காற்று வீசும் திசை மற்றும் அப்போதைய தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக பட்டாசுக்கு தடை விதிக்கக் கூடாது; விற்பனையை ஒழுங்குப்படுத்தலாம்" என்று தொழிலாளர் சங்கம் சார்பில் வாதிடப்பட்டது.

பட்டாசு தயாரிப்பில் பெரும்பாலும் குழந்தை தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏழை எளிய ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த குடும்பங்களே ஈடுபட்டு கடும் நோய் பாதிப்புக்கு உள்ளாகி, குறைந்த வயதிலேயே மரணத்தைத் தழுவும் அவலம் தான் சமூக எதார்த்தம். அதுவும் பட்டாசு தயாரிக்கும் முதலாளிகளிடம் முன்கூட்டியே வாங்கிய கடனுக்காக வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு இவர்கள் இந்த நச்சுத் தொழிலில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். பல இலட்சம் குடும்பங்களுக்கு இந்தத் தொழில் வாழ்வாதாரம் என்பது உண்மைதான். ஆனால் வாழ்க்கையை நஞ்சாக்கிக் கொண்டு வாழும் வாழ்க்கை என்ற உண்மையை மறுத்துவிட முடியாது. இப்படி ஒரு 'உயிரை மாய்க்கும்' வேலையை 'தொழிலாக' அங்கீகரிப்பதே சரிதானா என்ற கேள்வியை எழுப்பியாக வேண்டியிருக்கிறது. கையால் மலம் எடுக்கும் மக்கள், அந்த இழி தொழிலை செய்யக் கூடாது என்று கூறினால், அவர்கள் பிழைப்புக்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி கேட்பதில் அர்த்தமும் இல்லை; மனிதமும் இல்லை. எனவே பட்டாசுத் தொழிலில் ஈடுபடும் மக்களை அதிலிருந்து விடுவித்து, அவர்களின் வாழ்வதாரத்துக்கு மாற்றுத் திட்டங்களை உருவாக்குவதே சமூக நலனில் கவலை கொண்ட ஆட்சிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் கடமையாக இருக்க முடியும்.

தொழிற்சங்கம் சார்பில் மற்றொரு வாதமும் முன் வைக்கப்பட்டது. தீபாவளி ஒரு மதத்தின் பண்டிகை; அந்த மதப் பண்டிகையில் பட்டாசுகளையும் வெடிப் பது அடிப்படையான மதக் கடமை; எனவே அந்த மதக் கடமையில் குறுக்கிடுவது மத அடிப்படை சுதந்திரத்தில் (சட்டத்தின் 25ஆவது பிரிவு) குறுக்கிடு வதாகும்" என்று மத சுதந்திரத்தோடு பட்டாசு வெடிப்பதை தொடர்புபடுத்தி வாதிட்டார்கள். நீதிபதிகள் ஏ.கே. சிக்ரி மற்றும் அசோக் பூஷன் அமர்வு இந்த வாதத்தை நிராகரித்து விட்டது. "மத சுதந்திரத்திற்கான அரசியல் சட்டப் பிரிவு 25 - மனித உயிர் வாழ்க்கையை உறுதி செய்யும் சட்டப் பிரிவு 21க்குக் கட்டுப்பட்டதேயாகும். ஒரு குறிப்பிட்ட மதத்தின் 'பழக்கம் - சடங்கு' மக்களின் ஆரோக்கியம் - உயிர் வாழ்தலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துமானால் - அத்தகைய சடங்கு - பழக்கங்களுக்கு (Religious Practice) 25ஆவது பிரிவின் கீழ் உரிமை கோர முடியாது" என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

ஒரு சமூகமாக - பட்டாசு வெடித்து விழா கொண்டாடுவோருக்கு தனியாக ஒரு இடத்தை மத்திய மாநில அரசுகள் உரிய பாதுகாப்புகளுடன் ஒதுக்கித் தரலாம் என்றும், பட்டாசு ஒலி - பாதிப்பை ஏற்படுத்தாத அளவில் இருக்க வேண்டும். இதைக் கண்காணிக்கும் பொறுப்பை பெட்ரோலியம் மற்றும் வெடி பொருள் பாதுகாப்பு அமைப்பான 'பெசோ' ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் உச்ச நீதிமன்றம் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பட்டாசு தொழிலில் ஈடுபடுவோருக்கு பாதிப்புகள் நேர்ந்து விடக் கூடாது என்ற நோக்கத்தோடு சமரசமான இந்த முடிவுக்கு வந்திருப்பதாகக் கூறியுள்ள உச்சநீதிமன்றம், "இது தொடக்கமாக எடுத்துள்ள முடிவுதான். எதிர்காலத்தில் தேவைப்பட்டால் மேலும் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க நீதிமன்றம் தயங்காது" என்று தெளிவுபடுத்தியிருக்கிறது.

மதப் பண்டிகைகள் - புராணக் கதைகளின் அடிப்படையில் பார்ப்பனியத்தால் உருவாக்கப் பட்டவை. அதன் தத்துவங்கள் - ஆரியர்களை உயர்த்தி, திராவிடர்களை இழிவுபடுத்துவதற்கும் அந்த 'இழிவை' திராவிடர்கள் பெருமையாகக் கருதி - ஆரியத்துக்கு அடங்கிப் போக வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் பண்டிகைகள் சமுதாயத்துக்கு உணர்த்துவதற்குமாகவே உருவாக்கப் பட்டவை.

தேவ-அசுரப் போராட்டங்கள்தான் இந்தப் பண்டிகைகளின் மய்யமான கருத்து. இந்தப் புராணப் புரட்டுகளை நீண்டகாலம் மக்களிடம் நிலைபெறச் செய்ய முடியாது என்பதால்தான் அதை கொண்டாட்டமாக மாற்ற பட்டாசு, புத்தாடை, இனிப்பு, எண்ணெய்க் குளியல் என்ற பொழுது போக்குகளை இணைத்தார்கள்.

தொலைக்காட்சியின் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், நடிகைகள் பேட்டிகள், தள்ளுபடி விற்பனைகள் என்று பொழுது போக்குகளையும் வணிகத்தையும் மதத்தோடு இணைத்துக் கொண்டுள்ளன.

இந்த நிலையில் 'மனித உயிர் வாழ்க்கை'க்கு அரசியல் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைக்கு கட்டுப்பட்டதே 'மத சுதந்திர உரிமை' என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த வகையில் இத் தீர்ப்பை வரவேற்கிறோம். இடதுசாரி, முற்போக்கு அமைப்புகளின் தொழிற்சங்கங்கள் பட்டாசு வணிகத்துக்காக வாதாடுவதில் அடங்கியுள்ள சமூக - பண்பாட்டு - மதவாத பிரச்சினைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

# பட்டாசு வெடிப்பின் ஆபத்து: மாசு கட்டுப்பாட்டு வாரியம் எச்சரிக்கிறது

**தீபாவளி பட்டாசு வெடிப்புகளால் இந்தியா விலேயே அதிக காற்று மாசு ஏற்படும் நகரமாக கடந்த ஆண்டு சென்னை இருந்தது என்று கூறியுள்ள மாசு, கட்டுப்பாட்டு வாரியம் சுவாசக் கோளாறு, மூச்சுத் திணறல், தொண்டை எரிச்சல் பாதிப்புகளோடு புற்று நோய் ஆபத்தும் இதில் அடங்கியிருக்கிறது என்று எச்சரித்துள்ளது.**

தீபாவளி பண்டிகையின்போது பட்டாசுகளால் காற்று மாசு ஏற்படுவதைத் தடுக்க, குறிப்பிட்ட பொது இடங்களில் மட்டும் பொதுமக்கள் பட்டாசு வெடிக்க அனுமதி வழங்குவது குறித்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பரிசீலித்து வருகிறது.

தீபாவளியன்று பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் காற்று மாசானது மிகவும் அதிகமாக உள்ளது. இது மதம் மற்றும் திருவிழா சார்ந்த விஷயம் என்பதால், அரசானது விழிப்புணர்வை மட்டுமே நம்பியுள்ளது. அதுவும் கடந்த ஆண்டு தீபாவளியின் போது கை கொடுக்கவில்லை. கடந்தஆண்டில் தீபாவளி பண்டிகை யின்போது, சென்னை சவுக்கார் பேட்டையில் 777 மைக்ரோ கிராம் காற்று மாசு பதிவானது.

காற்றில் மிதக்கும் 10 மைக்ரோ கிராமுக்கும் குறைவான அளவுள்ள நுண்ணிய துகள்கள், ஒரு கன மீட்டர் காற்றில் எவ்வளவு உள்ளது என்பதன் அடிப்படையில் காற்று மாசு கணக்கிடப்படுகிறது. 10 மைக்ரோ கிராம் அளவுள்ள துகள்கள், ஒரு கன மீட்டர் காற்றில் 100 மைக்ரோ கிராம் வரை இடம்பெற்றிருப்பது, அனுமதிக்கப்பட்ட அளவாக உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட அளவை விட 7 மடங்கு மாசு அதிகரித்திருந்தது. இதனால் தீபாவளி தினத்தன்று காற்று மாசு கணக்கிடப்பட்ட நகரங்களில் சென்னை, தேசிய அளவில் முதலிடம் பிடித்தது. அன்று இரவு, சென்னையில் பலர் சுவாசக் கோளாறு, தொண்டை எரிச்சல், மூச்சுத் திணறல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டனர். அந்த மாசு நுரையீரலில் தங்கி, புற்றுநோயாக மாறுவதற்கும் வாய்ப்புகள் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக் கினறனர்.

கடந்த 2014 மற்றும் 2015-ம் ஆண்டுகளில் கொல்கத்தாவில் தீபாவளியின்போது முறையே 852 மைக்ரோ கிராம், 1000 மைக்ரோ கிராம் என காற்று மாசு பதிவானது. அதனைத் தொடர்ந்து மேற்குவங்க அரசு, பட்டாசில் கலக்கப்படும் ரசாயனங்களின் அடர்த்தியை குறைக்கவும், பட்டாசு வெடித்தால் ஏற்படும் ஒலியின் அளவைக் குறைக்கவும் உத்தர விட்டது. இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை பட்டாசு வெடிப்பதையும் தடுத்தது. அதனால் 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் தீபாவளியின்போது முறையே 282, 61 மைக்ரோ கிராமாக காற்று மாசு குறைந்தது.

இந்நிலையில் சென்னையில் தீபாவளியின்போது பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் காற்று மாசுவைத் தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் கூறியதாவது:

வசிப்பிடங்களில் குழந்தைகள் மற்றும் இதயநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்வாய்ப்பட்ட முதியோர்கள், சுவாச நோய்களுக்கு சிகிச்சை பெற்றுவருவோர் உள்ளனர். வீடுகளில் நாய்களும் வளர்க்கப்படுகின்றன. இவர்களுக்கு வெடிச் சத்தம், புகை ஆகாது. அதனால் வீடுகளில் தனித்தனியாக பட்டாசு வெடிப்பதை தவிர்த்து, பொதுமக்கள் ஆதரவுடன், அந்தந்த பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது இடங்களில், குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் பட்டாசு வெடிக்க அனுமதிக்கலாமா? என்பது குறித்து பரிசீலித்து வருகிறோம். அங்கு வெடிக்கப் படும் பட்டாசுகளை விதிகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டதுதானா என பரிசோதிக்கவும் திட்டமிட்டிருக்கி றோம்.

அது தொடர்பாக சென்னை மாநகராட்சி, மாநகர காவல்துறை, சுற்றுச்சூழல் துறை அதிகாரி களுடனான ஆலோசனைக் கூட்டம் விரைவில் நடத்தப்பட உள்ளது.

மேலும் பட்டாசுகளை வெடிப்ப தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்துவிழிப்புணர்வும் ஏற்படுத்த வுள்ளோம்.

பட்டாசால் ஏற்படும் குப்பைகள், வீட்டில் உருவாகும் குப்பைகளைப் போன்றதல்ல. அவற்றை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அழிக்க, குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பட்டாசு வெடிப்பது உதவியாக இருக்கும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

தலையங்கம்

## வேலை வாய்ப்புகளைத் தடுக்கும் தென்னக தொடர்வண்டித் துறை

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்தோடு மத்திய மாநில அரசுகள் திட்டங்களை உருவாக்குவது இல்லை. அதன் காரணமாக இளையச் சமூகம் கடும் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. படித்த இளைஞர்களே வேறு வழியின்றி கிரிமினல்களாக மாறும் நிலையை ஆட்சிகள்தான் உருவாக்கி வருகின்றன. உருவாகும் வேலை வாய்ப்புகளைக் கூட நிரந்தரப் பணிகளாக்காமல் ஒப்பந்த ஊழியர்கள் தற்காலிக ஊழியர்களாக குறைந்த ஊதியத்தில் நியமிக்கவே மத்திய மாநில ஆட்சிகள் விரும்புகின்றன.

அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் தொடர்வண்டித் துறையில் 13 இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். இதில் தென்னக தொடர்வண்டித் துறையில் மொத்தம் 1இலட்சத்து 2 ஆயிரம் பணியிடங்கள் உள்ளன. சென்னை, திருச்சி, மதுரை, பாலக்காடு, திருவனந்தபுரம், சேலம் ஆகிய மண்டலங்கள் அடங்கியுள்ள இப்பிரிவில் 15,000 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன. தொடர்வண்டித் துறையில் சில மாதங்களுக்கு முன்பு, 90,000 பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு விண்ணப்பங்கள் கோரியபோது, வந்த விண்ணப்பங்கள் 2 கோடியே 30 இலட்சம். அந்த அளவுக்கு இளைஞர்கள் வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். இந்நிலையில் தென்னகத் தொடர்வண்டித் துறையில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்காக மத்திய அரசு இப்போது விபரீத முடிவு ஒன்றை எடுத்துள்ளது. அதாவது காலியாக உள்ள 15,000 பணியிடங்களில் 5,000 இடங்களை ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு நிரப்பப் போகிறார்களாம். இது மிக மோசமான கண்டிக்கத்தக்க முடிவு. புதிய இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கு கதவடைக்கும் முயற்சி. இதற்கான வேலைகள் ஏற்கனவே தொடங்கி விட்டதாக செய்திகள் வந்துள்ளன. தொடர்வண்டித் துறையில் ஓய்வு பெறும் வயது 60. எல்லா கோட்டங்களிலும் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியமர்த்தும் பணி தொடங்கிவிட்டாலும் சென்னை கோட்டத்தில் 1279 பணியிடங்களுக்கு ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு நிரப்பும் முயற்சிகள் நடக்கின்றன. இவர்களுக்கு கடைசியாக வாங்கிய ஊதியத்திலிருந்து பென்ஷன் தொகையைக் கழித்து மீதித் தொகையை மாத ஊதியமாக வழங்கப் போகிறார்களாம். அதுவும் இப்படி ஓய்வு பெற்றவர்களை நியமிக்கப் போகும் பணிகள் பாதுகாப்புத் துறை சார்ந்தவை. 75 கார்டுகள், 55 ஸ்டேஷன் மாஸ்டர்கள், 26 வெல்டிங் மாஸ்டர்கள், 134 பாயின்ட்ஸ் மேன்கள், 238 தண்டவாள பராமரிப்பாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவில் 390 பேர். ஓய்வு பெற்றவர்களால் இத்தகைய கடினமானப் பணிகளை செய்ய இயலுமா என்ற கேள்வி ஒரு பக்கம் இருந்தாலும், இந்தப் பணிகளில் படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களின் வாழ்க்கைகளில் ஒளியேற்றி வைக்க தொடர்வண்டித் துறை மறுக்கலாமா?

ஓய்வு பெற்றவர்களுக்கு பதவி நீட்டிப்பு வழங்குவது என்ற கொள்கைக்கு உலகு முழுதும் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன. இது சமூக நீதிக்கும் எதிரானது. குறிப்பாக ஏற்கனவே பார்ப்பன அதிகார வர்க்கம் ஆதிக்கம் செலுத்தும் அய்.அய்.டி.களில் ஓய்வு வயதை 5 ஆண்டு காலம் உயர்த்தினார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவித இடஒதுக்கீடு ஆணை அமுல்படுத்தப்பட்டவுடன் அடுத்து வந்த வாஜ்பாய் ஆட்சி, மத்திய அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை மேலும் உயர்த்தி புதிய வேலை வாய்ப்புகளே உருவாகாமல் தடுத்து நிறுத்தியது. தென்னகத் தொடர்வண்டித் துறையில் வடநாட்டுக்காரர்கள் ஏராளமாகக் குவிக்கப்பட்டு வருவதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இப்போது மற்றொரு பேரிடியான முடிவை மத்திய ஆளும் பார்ப்பனிய பா.ஜ.க. ஆட்சி, எடுத்திருக்கிறது.

நியாயமாக பணி ஓய்வு பெறும் வயதை இப்போது இருக்கும் 60லலருந்து குறைப்பதுதான் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் சரியான வேலை வாய்ப்புக் கொள்கையாக இருக்க முடியும். ஒரு நல்ல மக்கள் நல ஆட்சி என்றால், இத்தகைய முடிவைத் தான் எடுக்க வேண்டும். ஆனால் முடிவெடுக்க வேண்டிய அதிகார மய்யத்தில் ‘நந்திகளாக’ அமர்ந்திருக்கும் பார்ப்பன அதிகார வர்க்கம் தொடர்ந்து ‘மனுதர்மப் பார்வை’யோடு பல இலட்சம் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களின் வேலை வாய்ப்புகளை தடுப்பதற்கே திட்டங்களைத் தீட்டுகிறது. இந்த விபரீத முடிவை தொடர்வண்டித் துறை கைவிட வேண்டும். அரசியல் கட்சிகள், இயக்கங்கள், கண்டனக் குரல் எழுப்ப வேண்டிய மிக முக்கியமான பிரச்சினை இது.

# தேவ-அசுரப் போராட்டமே தீபாவளி பண்டிகை

**– பெரியார் –**

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவது தமிழனுக்கு மானக்கேடும், முட்டாள்தனமுமான காரியம் என்று 50 ஆண்டுகளாக எழுதியும் பேசியும் வருகின்றேன். இதன் பயனாய் அநேக தமிழ் மக்கள் இப்பண்டிகையைக் கொண்டாடாமல் நிறுத்தி விட்டார்கள் என்றாலும், இன்னமும் பல தமிழ் மக்கள் தங்கள் இழிநிலையை மான அவமானத்தை உணராமல் கொண்டாடி வருகிறார்கள். இக்கொண்டாட்டமானது தமிழ் மக்களுடைய, இழிவையும் முட்டாள்தனத்தையும் காட்டுவது மாத்திரமல்ல, தமிழர்கள் (திராவிடர்கள்) ஆரிய இனத்தானுக்கு அடிமை, அவனது தலைமைக்கு அடிமை, மீட்சிபெற விருப்பமில்லாத மானங் கெட்ட ஈனப்பிறவி என்பதைக்காட்டிக் கொள்ளப் போட்டி போடுகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

“மானமும் பகுத்தறிவும் உடையவனே மனிதன்; அஃதிலார் மனித உருவமுள்ள மிருகமே ஆவர்” என்ற அறிவுரைப்படி மானமில்லா மக்களே இப்போது தீபாவளி கொண்டாடுகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

வெளிநாட்டிலிருந்து பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு நம் நாட்டிற்குள் புகுந்த ஆரியர் அக்காலத்தில் அவர்கள் இருந்த காட்டுமிராண்டித் தன்மைக்கு ஏற்ப மடமையினால் கொண்ட கருத்துக்களை மதுக்குடி வெறியில் உளறி வைத்தத் தன்மைக்கு ஏற்ப தொகுத்துக் களியாட்டம் ஆடிய ஆட்டங்களைத் தமிழ் மக்கள் என்ன சூழ்நிலையாலோ ஏற்று அவற்றுக்கு அடிமையாகி, பின்பற்றித் தாங்களும் அப்படியே களியாட்டம் ஆடி வருகிறார்கள். அதன் பயனாய், அம்மடமையும் அல்லது வெறி உளறலுமே இன்று தமிழ் மக்களுக்கு கடவுளர்களாக, மதமாக, நீதி நெறிகளாக, பண்டிகை, விரதம், நோன்பு, உற்சவங்களாக, நல்ல நாள், தீய நாளாக, அப்பாத்திரங்களே நல்லவர்களாக, தீயவர்களாக ஆக்கப்பட்டு இருந்து வருகின்றார்கள்.

இஸ்லாம், கிருஸ்துவம் முதலிய மார்க்கங்களாலும், வெள்ளையர் ஆட்சியாலும் உலக மக்களிடையில் ஒரு அளவுக்கு தலைகீழான மாறுதல் ஏற்படும்படியான கல்வி அனுபவமும் ஞானமும் ஏற்பட்டிருந்தும்கூட இந்த மடமை மிக்க ஆரிய வலையில் சிக்கிய தமிழ் மக்களிடையில் பெரிதும் சிறு அளவு ஞானமும் மாறுதலும் ஏற்படாமல் அம் மடமையிலேயே மூழ்கித் திளைத்து வருகிறார்கள் !

எவ்வளவு சொன்னாலும் அறிவும் அனுபவமும் இல்லாத சில இளைஞர்கள் (மைனர்கள்) பித்தலாட்டத்தாலும், வஞ்சகமும், துரோகம், மோசத்தாலும், வாழவேண்டிய தீய எண்ணத்தில் தேர்ச்சி பெற்ற பரத்தையரிடம் சிக்கி விட்டார்களேயானால் எப்படி யார் எவ்வளவு அறிவையும் நன்மையையும் போதித்தாலும் அதைக் காதில் வாங்கக்கூட செவிப்புலனை ஒதுக்காமல் தன் உள்ளம் முழுவதையும் பரத்தையிடமே ஒப்புவித்து அவளிடம் ஓடவே வழி தேடுவார்களோ அதே போல் நடந்து கொள்கிறார்கள் !

இப்படி நடப்பவர்கள் பாமர மக்கள் மாத்திரமல்லாமல் தமிழ்ப்பண்டிதர்கள் அதுவும் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் உட்பட தமிழ்ப் பண்டிதர்கள் முதல் பெரும்புலவர்கள் மற்றும் இங்கிலீஷ் விஞ்ஞானத்தில் உடற்கூறு, பூகோளக்கூறு இவைகளில் நிபுணர்கள் உட்பட எல்லாத் தமிழர்களும் இந்தக் காட்டுமிராண்டி மடமைக்கு அடிமைப்பட்டு, சிந்தனையின்றி நடந்து கொள்வதென்றால் தீபாவளி கொண்டாடுவது என்பதில் உள்ள தமிழனின் இழிவுக்கும், மடமைக்கும், மானமுமற்ற தன்மைக்கும் இதைவிட வேறு எதை எடுத்துக்காட்டாகக் கூற முடியும் ?

நம் பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் நம் மக்களுக்கு இந்த இப்படிப்பட்ட மடமையை உணரும் அளவுக்குக்கூட அறிவைக் கொடுக்கவில்லையென்றால், இக் கல்விக் கூடங்கள் மடமையையும் மானமற்ற தன்மையையும் பயிர் செய்யும் வளமுள்ள விளைநிலம் என்பதைத் தவிர, வேறு என்னவென்று சொல்ல முடியும் ? இதில் பயிலும் மாணவர்களுக்கு எந்த விதத்தில் தான் மானமும் அறிவும் விளைய முடியும் ?

**தீபாவளி என்றால் என்ன ? (புராணம் கூறுவது)**

1. ஒரு காலத்தில் ஒரு அசுரன் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டுபோய் கடலுக்குள் ஒழிந்து கொண்டான்.
2. தேவர்களின் முறையீட்டின்மீது மகாவிஷ்ணு பன்றி அவதாரம் (உரு) எடுத்துக் கடலுக்குள் புகுந்து அவனைக் கொன்று உலகத்தை மீட்டு மீண்டும் வந்து விரித்தார்.
3. விரித்த உலகம்(பூமி) அப்பன்றியுடன் கலவி செய்ய ஆசைப்பட்டது
4. ஆசைக்கு இணங்கி பன்றி(விஷ்ணு) பூமியுடன் கலவி செய்தது.
5. அதன் பயனாய் பூமி கர்ப்பமுற்று, நரகாசூரன் என்ற பிள்ளையைப் பெற்றது.
6. அந்தப்பிள்ளை தேவர்களை வருத்தினான்.
7. தேவர்களுக்காக விஷ்ணு, நரகாசூரனுடன் போர் துவங்கினார்.
8. விஷ்ணுவால் அவனை வெல்ல முடியவில்லை. விஷ்ணுவின் மனைவி நரகாசூரனுடன் போர் தொடுத்து அவனைக் கொன்றாள்.
9. இதனால் தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.
10. இந்த மகிழ்ச்சியை (நரகாசூரன் இறந்ததற்காக) நரகாசூரனின் இனத்தாரான திராவிட மக்கள் கொண்டாட வேண்டும். இதுதானே தீபாவளிப் பண்டிகையின் தத்துவம் !

இந்த 10 விஷயங்கள்தான் தமிழனைத் தீபாவளி கொண்டாடும்படி செய்கிறதே அல்லாமல், வேறு என்ன என்று யாருக்குத் தெரியும் ? யாராவது சொன்னார்களா ? இதை ஆராய்வோம். இக்கதை எழுதிய ஆரியர்களுக்கு பூமி நூல் கூடத் தெரியவில்லை என்று தானே கருத வேண்டியிருக்கிறது ?

1. பூமி தட்டையா ? உருண்டையா ?
2. தட்டையாகவே இருந்தபோதிலும் ஒருவனால் அதைப் பாயாகச் சுருட்ட முடியுமா ?
3. எங்கு நின்று கொண்டு சுருட்டுவது ?
4. சுருட்டினால் தூக்கிக் கட்கத்திலோ தலைமீதோ எடுத்து ஏக முடியுமா ?
5. எங்கிருந்து தூக்குவது ? கடலில் ஒளிந்து கொள்வதாயின் கடல் அப்போது எதன் மீது இருந்திருக்கும் ?
6. விஷ்ணு மலம் தின்னும் பன்றி உருவம் எடுக்க வேண்டிய அவசியம் என்ன ?
7. அரக்கனைக் கொன்று பூமியை விரித்ததால் பூமிக்குப் பன்றி மீது காதல் ஏற்படுவானேன் ?
8. பூமி மனித உருவா ? மிருக உருவமா ?
9. மனித உருவுக்கும் மிருக உருவுக்கும் கலவியில் மனிதப் பிள்ளை உண்டாகுமா ?
10. பிறகு சண்டை ஏன் ? கொல்லுவது ஏன் ? இதற்காக நாம் ஏன் மகிழ்ச்சி அடையவேண்டும். இவைகளைக் கொஞ்சமாவது கொண்டாடும் தமிழ்ப்புலவர்கள் அறிஞர்கள் சிந்திக்க வேண்டாமா ?

நரகாசூரன் ஊர் மாகிஷ்மகி என்ற நகரம், இது நர்மதை ஆற்றின் கரையில் இருக்கிறது. மற்றொரு ஊர் பிரகத் ஜோதி ஷா என்று சொல்லப்படுகிறது. இது வங்காளத்தில் அசாம் மாகாணத்துக்கு அருகில் இருக்கிறது. இதைத் திராவிட அரசர்களே ஆண்டு வந்திருக்கிறார்கள். வங்காளத்தில் தேவர்களும் அசுரர்களும் யாராக இருந்திருக்க முடியும் ?

இவைகள் ஒன்றையும் யோசிக்காமல் பார்ப்பனன் எழுதி வைத்தான் என்பதற்காகவும் சொல்லுகிறான் என்பதற்காகவும் நடுஜாமத்தில் எழுந்து கொண்டு குளிப்பதும், புதுத் துணி உடுத்துவதும், பட்டாசு சுடுவதும், இந்த பார்ப்பனர்கள் வந்து பார்த்து “கங்கா ஸ்நானம் ஆயிற்றா” என்று கேட்பதும், நாம் ஆமாம் என்று சொல்லி கும்பிட்டு காசு கொடுப்பதும், அவன் காசை வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டு போவதும் என்றால் இதை என்னவென்று சொல்லுவது ?

மாணவர்களே ! உங்கள் ஆசிரியர்களுக்கு மானம் புத்தி இல்லாவிட்டாலும் நீங்களாவது சிந்தியுங்கள். எதற்காக இவ்வளவு சொல்லுகிறேன் என்றால், இக்கதை எழுதின காலத்தில் (ஆரியர்) பார்ப்பனர்கள் எவ்வளவு காட்டு மிராண்டிகளாக இருந்திருக்க வேண்டும்? அந்தக்காலத்தில் நாம் ஈன நிலை அடைந்து ஏன் ? என்பதைத் தமிழன் ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்க வேண்டும் என்பதற்கு ஆகவேயாகும்.

## திருச்செங்கோடு கருத்தரங்கில் கொளத்தூர் மணி பேச்சு (4)

# நாடகத்தில் வேடம் தரித்து கொள்கை பரப்பியவர்கள், திராவிடத் தலைவர்கள்

*"கருஞ்சட்டைக் கலைஞர்" என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

இன்றைக்கும் ராமனை உயர்த்திப் பேசிக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் இருக்கிறது. நாம் இராவணனை உயர்த்திப் பிடிக்கிற கூட்டம். இருவரும் கற்பனைக் கதாபாத்திரங்கள் என்பதில் நமக்கு எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை. அவர்கள் எழுதியபடியே பார்த்தாலும்கூட என்றுதான் நாம் சொல்லுகிறோமே தவிர, நாம் அதை நம்பிக்கொண்டு பேசவில்லை.

கம்பர் ஒரு இடத்தில், 'இரக்கம் எனும் பொருளிலா அரக்கன்' என்று இராவணனைப் பற்றி சொல்லியிருப்பார். இராமன்தான் தீயவன், இராவணன் அல்ல என்று நிறுவுவதற்காக நாடகம் ஒன்று நடந்தது. எல்லோரும் இறந்துபோன பிறகு வழக்கு நடக்கும் என்பதுபோல கற்பனையில் இந்த நாடகம் உருவாக்கப்பட்டிருக்கும். நீதி தேவன் முன்னால் எல்லோரும் நிற்பார்கள். என்னை இரக்கமெனும் பொருளிலா அரக்கன் என்று கம்பர் சொல்லிவிட்டார் என்று கம்பர் மீது இராவணன் வழக்கு கொடுப்பார். வழக்கு விசாரணை நடக்கும். அப்போது, மனைவியைக் குழந்தையோடு காட்டில் துரத்திவிட்டாயே , மறைந்திருந்து கொன்றாயே இரக்கமுள்ளவனா நீ என்று ராமனைப் பார்த்து இராவணன் ஒவ்வொன்றாகக் கேட்பார். கம்பன் எல்லா கேள்விக்கும் பதில் கூறி சமாளிப்பார். இறுதியாக நீதி தேவனே மயக்கமடைந்து விழுந்துவிடுவார். அப்படித்தான் அந்த நாடகம் முடியும்.

சிலவற்றை இப்போது நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1978ஆம் ஆண்டில் பெரியார் நூற்றாண்டு விழா எடுக்கப்பட்டது. ஒரு ஆண்டு முழுவதும் எடுக்கப்பட்ட இதன் நிறைவு 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி சென்னையில் நடந்தது. நூற்றாண்டு விழா நிறைவு மாநாட்டில்தான் அந்த ராமாயண நாடகம் போடப்பட்டது. இதை எல்லா கட்சிகளும்தான் நடத்துவார்கள் என்று கருதிவிட இயலாது.

திராவிடர் கழகம் நடத்திய அந்த மாநாட்டில் நடந்த நாடகத்தில் நடித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள். அதுதான் சிறப்பு. நீதிதேவனாக நடித்தவர் அண்ணாவின் நெருங்கிய நண்பர் சி.வி.ராஜகோபால். காஞ்சிபுரத்தைச் சேர்ந்த இவர் எம்.எல்.சியாகவும் இருந்துள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அமைச்சராக இருந்த சி.எம்.அண்ணாமலைதான் கம்பராக நடிக்கிறார். 3 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, 2 முறை காஞ்சிபுரம் நகராட்சியின் தலைவராக இருந்த கே.எம்.ராஜகோபால் என்பவர் இராவணனாக நடித்தார். தோழமைக் கழகம், தாய்க் கழகமாக இருந்தாலும்கூட ஒரு முன்னாள் அமைச்சர் நாடகத்தில் நடிப்பதை இப்போது எண்ணிப் பார்க்க இயலுமா? ஆனால் இவர்கள் நடித்தார்கள்.

கொள்கையை எடுத்துச் செல்வதுதான் நோக்கம் என்று வாழ்ந்த முந்தைய தலைமுறையினரை நினைவூட்டுவதற்காக இதைச் சொல்லுகிறேன். அதேபோலத்தான் சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம். நீ



என்னதான் மன்னனாக இருக்கலாம். ஆனால் ஒரு சூத்திரனாக இருந்து இந்து சாம்ராஜ்ஜியத்திற்கு முடி சூட்டிக் கொள்ள இயலாது என்று சொல்வதுதான் அந்த நாடகம். அதைச் சொல்லி அவர்கள் விளக்குவார்கள்.

இராமாயணத்தை எரிக்க வேண்டுமென்று பெரியார் ஒரு போராட்டத்தை அறிவிக்கிறார். அந்தப் போராட்டத்தை விளக்குவதற்காக அண்ணா பரப்புரை செய்கிறார். அதற்கு எதிர்ப்பு வருகிறது. சேலத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் பேசுகிறார்.

சென்னையில் அண்ணாவும் ஈழத்து அடிகளும் ஒருபக்கம் இராமாயணத்தை எரிக்க வேண்டுமென்று பேசுகிறார்கள். இன்னொரு பக்கம் சென்னைப் பல்கலைக்

> **இந்து அறநிலையத் துறையின் ஆணையாளராக இருந்தவர் ராமாயணத்தை ஏன் எரிக்க வேண்டுமென்ற விளக்கக் கூட்டம் நடத்தியதோடு மட்டுமில்லாமல் 'கோயில் பூனைகள்' என்ற புத்தகத்தையும் எழுதினார் கோவைக் கிழார்.**

கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவன் சீனிவாசன் இதை எதிர்த்துப் பேசுகிறார்கள். தமிழ்நாடு இந்து சமய அறநிலையைத் துறையின் (அப்போது இந்து பரிபாலன சங்கம்) தலைவராக சி.எம்.ராமச்சந்திர செட்டியார் (கோவைக் கிழார்) இராமாயணத்தை ஏன் எரிக்க வேண்டும் என்று சென்னையில் நடந்த விளக்கக் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். அப்போது ஆணையராக இருந்தார். வழக்கறிஞரும்கூட. இதுபோல அரசு ஊழியர்கள் தலைமையில் இப்போது நடத்த இயலுமா?

1943ஆம் ஆண்டில் அண்ணா இதைப் பேசியபோது காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் இருந்தது. இந்து அறநிலையத் துறையின் ஆணையாளராக இருந்தவர் இராமாயணத்தை ஏன் எரிக்க வேண்டுமென்ற விளக்கக் கூட்டம் நடத்தியதோடு மட்டுமில்லாமல் 'கோயில் பூனைகள்' என்ற புத்தகத்தையும் எழுதினார் கோவைக் கிழார். கோயில்களில் நடக்கிற திருட்டுக்களைப் பற்றிய நூல். திருச்செங்கோட்டு கோயிலில் மட்டும்தான் அர்ச்சகன் உண்டியலிலிருந்து திருடினான் என்று எண்ண வேண்டாம். பல கோயில்களில் திருட்டு நடந்துள்ளது. அத்தகைய கோயில் திருட்டுக்களை தொகுத்து அவர் புத்தகமாக எழுதினார். அந்த நூலின் மறுபதிப்பை திராவிடர் கழகம் வெளியிட்டுள்ளது.

சேலத்தில் நடந்த கூட்டத்துக்கு, சேலம் கல்லூரியின் முதல்வராக இருந்த இராமசாமிக் கவுண்டர் தலைமை தாங்கினார். அவர் நாமம் போட்ட பக்தியாளர். ஆனால் பார்ப்பன எதிர்ப்பாளர். 27ஆண்டுகள் கல்லூரி முதல்வராக இருந்த அவர் இராமாயணத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று பேசுகிறார். இன்றைக்கு ஏன் அப்படிப்பட்ட தலைவர்கள் கிடைக்கவில்லை, ஆணையாளர்கள் ஏன் முன்வருவதில்லை என்று எண்ண வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

பார்ப்பனர்கள் எப்போதும் தங்கள் சிந்தனையில் சரியாக இருந்தார்கள் என்பதைப் போல, நம்மவர்களும் இருந்திருக்கிறார்கள். இரண்டுமுறை முதல்வராகியும் ஆட்சியை இழந்தார் இராஜகோபாலாச்சாரியார். 1939ஆம் ஆண்டு ஆட்சியை விட்டு சென்றவுடன் வியாசர் விருந்து என்ற நூலை இராஜாஜி எழுதினார். 1954ஆம் ஆண்டு குலக் கல்வி திட்டம் கொண்டு வந்து ஆட்சியை விட்டு சென்றபோது சக்கரவர்த்தி திருமகன் என்று இராமாயணத்தை எழுதினார். அதற்குக் கலைஞர் முரசொலியில் பதில் எழுதினார். இராஜாஜியின் அப்பா பேரும் சக்கவர்த்திதான். அதனால் சக்கவர்த்தியின் திருமகன் என்று கலைஞர் எழுதினார். இராஜாஜி என்று அவர் எழுத, கலைஞர் மூகாஜி என்ற பெயரில் எழுதினார். இது பின்னாளில் புத்தகமாக வந்தது. வேலூர் திராவிடன் பதிப்பகத்தார் இந்த நூலை அச்சிட்டார்கள்.

இராமாயணத்துக்கும் பரதாயணம் என்று கலைஞர் எழுதினார். இராமன் என்ன செய்தான், பரதன்தான் ஆட்சி செய்தான். ஒரே ஒருமுறை ஆட்சி செய்து மரண தண்டனை அளித்துவிட்டு சென்றுவிட்டான் ராமன். சம்பூகனின் தலையை வெட்டியதுதான் ராமன் செய்த சாதனை. வேறு என்ன செய்தான் என்று எழுதினார். அரசியல் கட்சியானாலும் இந்த சிந்தனைகள் தமிழ்நாட்டில் நிலவ வேண்டுமென்று இருந்த தலைவர்களைத்தான் கலைஞர் நினைவேந்தல் நிகழ்வில் நினைவூட்டிக் கொண்டிருக்கிறோம். அதை எண்ணிப்பார்த்து இப்போதிருக்க அரசியல் தலைமைகளும் அந்தப் போக்கினை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆவலில்தான் இதையெல்லாம் முன்வைக்கிறோம்.

காவியை இங்கே நுழைவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று பதவியேற்றவுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். அதை இப்போது எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதுதான் ஒட்டு மொத்த தமிழர்களுக்குப் பாதுகாப்பு. அதை உணர்ந்து அவர் பேசியிருப்பதுதான், கலைஞரின் ஆட்சி அமைய, அதை நோக்கிப் போகிறவரை மகிழ்ச்சியோடு நாம் பார்த்துதான் கலைஞரின் இந்த நிகழ்வில் நாம் கலந்து கொண்டிருக்கிறோம்.

திராவிட இயக்கத்தைப் பற்றியே பேசப்படுகிற சில செய்திகளையும் நாம் பேச வேண்டியத் தேவையில் இருக்கிறோம். திராவிடம் என்பதே ஏதோ ஆபத்தை விளைவிக்கிற ஒரு சொல் என்பதைப் போல பேசிக்கொண்டிருக்கிறார்கள். திராவிடம் என்ற வார்த்தையையே பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் இவர்கள் காலத்தில் கண்டுபிடித்த சொல்லைப் போலவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது வரலாற்றுக் காலந்தொட்டு இருக்கிறது. அதற்குள் போக விரும்பவில்லை. அண்மைக் காலத்தில் வைக்கப்பட்ட வாதங்களை மட்டும் பார்ப்போம்.

(தொடரும்)

தொகுப்பு: ர.பிரகாசு

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூரில் காவல்துறையின் தடையை மீறி கண்டன ஆர்ப்பாட்டம்: கழகத் தோழர்கள் கைது !

திருப்பூரில் கடந்த 22.10.2018 திங்கள் கிழமை அரசு நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் கணக்கு, ஆங்கிலம், அறிவியல், வரலாறு பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி ஒன்று வழங்கப்பட்டது. இது குறித்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாந்தி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தார். அதில் என்ன பயிற்சி என்றோ, யார் நடத்துகிறார்கள் என்றோ எதுவும் குறிப்பிடவில்லை. ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு விடுப்பு அளிக்க வேண்டும் என்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியோருக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.

22.10.2018 அன்று காலை பயிற்சி வகுப்புக்குச் சென்ற சுமார் 600 ஆசிரியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அவ்வகுப்பை நடத்த வந்தவர்கள் "இதிகாச சங்காலன சமிதி" என்ற வடமொழிப் பெயருடனும் வரலாற்றுத் தொகுப்புப் பேரவை என்று தமிழிலும் அறிமுகப் படுத்திக் கொண்டனர். பயிற்சியை நடத்தியவர்கள் சுப்பிரமணியம் மற்றும் டி.வி.ரங்கராஜன் ஆகியோர். இதனை ஒருங்கிணைத்தவர் இந்துத்துவ அமைப்பின் முதன்மை உறுப்பினர் திருப்பூர் நிட்ட்-டீ-கல்வி நிறுவனத்தின் தலைவராவார். இதில் சிறப்புரை யாற்றித் தொடங்கி வைத்தவர் முதன்மைக் கல்வி அலுவலர் சாந்தி.

பயிற்சி முழுக்க இந்துத்துவத்தைத் தூக்கிப் பிடிக்கும் கருத்துகளே சொல்லப்பட்டன. நமது இதிகாச புராணங்களை நாம் மறந்துவிடக் கூடாது. அதிலுள்ள கருத்துகளை ஆசிரியர்கள் படித்து தெரிந்து கொண்டு மாணவர்களுக்கு சொல்லித் தர வேண்டும். ஒவ்வொரு பாடவேலை தொடங்கும்போதும் "ஓம்" என்று சொல்லித் தொடங்கினால் மாணவர்களின் கல்வி கற்கும் திறன் அதிகரிக்கும். பசு மாட்டின் மூத்திரம் சிறப்பான மருத்துவ குணங்களைக் கொண்டது. இதிகாச காலத்திலேயே விமானம் இருந்தது. அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. எல்லாம் திட்டமிட்டு மறைக்கப்பட்டுவிட்டன. சமஸ்கிருதம் உயர்ந்த மொழி. அதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது போன்ற கருத்துகளைப் பேசினர். என்றைக்கு குருகுலக் கல்வி முறை மாற்றப்பட்டு மெக்காலே கல்வி முறை வந்ததோ அன்றே நம்நாடு நாசமாகி விட்டது. இப்போதுள்ள பாடத்திட்டம் குப்பை. இதையெல்லாம் தயாரிக்க ஒரு குழு வேறு தேவையா என்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரை மேடையில் வைத்துக் கொண்டே பேசினார்கள். அலுவலரும் சிரத்தையாகக் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார்.

பயிற்சியில் கலந்து கொண்டவர்களில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய ஆசிரியர்களும் இருந்தனர். இப்படிப் பட்ட ஒரு வகுப்பை அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் பட்டதைக் கண்டித்து எல்லோரும் பேசத் தொடங்கினர். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியினர் மறுநாளே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.




தமிழகத்தின் பொம்மை அரசைப் பயன்படுத்திக் கொண்டு பள்ளி மாணவர்கள் மனதில் நஞ்சை விதைக்கும் இதுபோன்ற காவிகளின் திட்டத்திற்கு உடந்தையாக இருந்த முதன்மைக் கல்வி அலுவலர் சாந்தி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும், இதுபோன்ற திட்டங்களை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்பதும் நமது கருத்தாகும்.

இதையடுத்து, மதவாதிகளுக்கு சட்டவிரோதமாக துணை போகும் திருப்பூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரை உடனடியாக பணி நீக்கம் செய்ய வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தோழமை அமைப்பு களுடன் இணைந்து 25.10.2018 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் காவல்துறையின் தடையையும் மீறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டத் தலைவர் முகில்ராசு, இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டச்செயலாளர் நீதிராசன், மாவட்ட அமைப்பாளர் அகிலன், சங்கீதா, மாநகர தலைவர் தனபால், மாநகர செயலாளர் மாதவன். மாநகர அமைப்பாளர் முத்துகுமார், தெ.பகுதி அமைப்பாளர் ராமசாமி, மாணவர் கழக அமைப்பாளர் பிரசாந்த், மடத்துக்குளம் மோகன், சரஸ்வதி, சஜினா, முத்துலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், செயலாளர் சரவணன், பொருளாளர் முத்துப் பாண்டி, சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், காவை ஈஸ்வரன், கோவை மாவட்டத் தலைவர் ராமச்சந்திரன், பல்லடம் கோவிந்த ராஜ், சூலூர் ஒன்றியம் பாபு ஆகிய தோழர்களும் மற்றும் தோழமை அமைப்புகள் ஆறுமுகம் (தி.க.), மு.சம்பத் (மதிமுக தொழிற்சங்கம்) ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

துரை வளவன் - மாநில துணைச் செயலாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி, அபுதாஹிர் - மாவட்டத் தலைவர், SDPI கட்சி, ஹபிபுர் ரஹ்மான் - மாவட்டத் தலைவர், பாப்புலர் பிரண்ட் ஆப் இண்டியா, ஜியாவுல்ஹக் - மாவட்ட ஒருங் கிணைப்பாளர், கேம்பஸ் ப்ரண்ட் ஆப் இண்டியா ஆகிய தோழர்கள் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தை திருப்பூர் மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் கள் ஒருங்கிணைப்பு செய்தனர்.

பங்கேற்ற தோழர்களில் 63 பேர் கைது செய்து தென்னம்பாளையத்தில் உள்ள திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

மேலும் த.பெ.தி.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் துணை அமைப்புகளும் தனித்தனியே போராட்டம் நடத்தினர்.

**– நமது செய்தியாளர்**

## ஈரோடு வடக்கு மாவட்டக் கழகம் நடத்திய தமிழர் கல்வி உரிமை மீட்பு பரப்புரைப் பயணம் 30.09.2017

பெரியார் 140 ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட கோபி ஒன்றிய கழகத்தின் சார்பில் கொடியேற்றம் மற்றும் தமிழர் கல்வி உரிமை பரப்புரை பயணம் ஆகியன 30.09.2018 ஞாயிறு அன்று சிறுவலூரில் நடைபெற்றது.



சிறுவலூர் பகுதியில் அமைந்துள்ள கழகத்தின் கொடிக்கம்பத்தில் கழக வழக்குரைஞர் தோழர் செகதீசன் கழகக் கொடியினை ஏற்றி வைத்து பரப்புரை பயணத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து தலைமை கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம இளங்கோவன் ஆகியோர் பயணத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினார்கள். அப்பகுதியில் நம் தோழர்களுக்கு கோபி ஒன்றியத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள் தேனீர் வழங்கி நம் பயணம் தொடர வாழ்த்துகள் தெரிவித்தனர். தொடர்ந்து எலந்தக்காடு பகுதியில் தோழர் சுந்தரம், மூப்பன் சாலையில் நதியா, கிழக்கு தோட்டம் பிரிவில் கிருட்டிணசாமி, மரியன்னை மேல்நிலைப்பள்ளி அருகில் பெரியார் பிஞ்சு அகிலன், கொளப்பலூர் பேருந்து நிலையம் பகுதியில் பெரியார் பிஞ்சு இலக்கியா ஆகிய பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த கழகக் கொடிக் கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர். கொளப்பலூர் பேருந்து நிறுத்தத்தில் நடைபெற்ற பிரச்சார பயணத்தில் தோழர்கள் இரமேசு, இராம இளங்கோவன் ஆகியோர் பயணத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள். தொடர்ந்து பயணக்குழு கோபிப் பகுதிக்கு சென்றது. பயணக்குழு செல்லும் வழியில் அமைக்கப்பட்டு இருந்த கழகக் கொடிக் கம்பத்தில் தோழர்கள் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர். அருவங்கொரையில் பெரியார் பிஞ்சு அறிவுச்சுடர், நம்பியூர் பிரிவில் பெரியார் பிஞ்சு அறிவுக்கனல், அம்மன் கோவில்பதியில் பிரவீன், கும்மிக்கருக்கு கலையரசி, வேட்டைக்காரன் கோவிலில் அறிவரசன், மொடச்சூரில் யாழினி, பச்சை மலை அடிவாரத்தில் தமிழரசன், நாயக்காடு பகுதியில் தேவராசு, கரட்டூர் பகுதியில் கார்த்தி, கடைவீதியில் அழகிரி, மூன்று முக்கு பகுதியில் சின்னதம்பி, அய்ந்து முக்கு பகுதியில் செல்வக்குமார், ல.கள்ளிப்பட்டிப் பிரிவு பகுதியில் இரமேசு, ல.கள்ளிப்பட்டி கருப்பண்ணன், கரட்டடிபாளையத்தில் அறிவுமதி ஆகியோர் கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர். கோபி பேருந்து நிலையம் பகுதியில் நடைபெற்ற பரப்புரைப் பயணத்தில் தமிழ்நாடு அறிவியல் மன்றம் வீராகார்த்திக் சிறப்புரை ஆற்றினார். தோழர்களுக்கு ஆன மதிய உணவை கொளப்பலூர் சுப்பிரமணியம் ஏற்பாடு செய்து இருந்தார். நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கோபி ஒன்றியத்தின் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
9841489896 newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 1st November 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN